[illegible] News Paper in Sri Lanka [illegible]: 94 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 08 ( 22 - 05 - 1991 ) புதன்கிழமை ஓசை: 93

## தபால் விநியோகம் நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான தபால் பொதிகள் நேற்று இரவு எடுத்துவரப்பட்டது. நாளை தொடக்கம் இந்தப் பொதிகளிலுள்ள தபால்கள் மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த பொதிகளை எடுப்பதற்கு பருத்தித்துறைக்கு யாழ்ப்பாணம் பெரியதபாலக அதிபரும் மேற்பார்வையாளரும் உட்பட சிலஊழியர்களும் நேற்று சென்றிருந்தனர். (4 ஆம் பக்கம் பார்க்க)

# ராஜீவ்காந்தி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவரும், முன்னாள் இந்தியப் பிரதமருமான ராஜீவ்காந்தி(46) நேற்றிரவு 10.10 மணியளவில் குண்டு வெடிப்பில் கொலைலப்பட்டுள்ளார். லோக்சபாத் தேர்தலுக்கான பிரச்சாரப் பொதுக் கூட்டமொன்றில் சென்னைக்கு சமீபமாக சிறிபெரும்புதூர் தேர்தல் தொகுதியில் பேசிக் கொண்டிருக்கையிலேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இக்குண்டு வெடிப்பில் உதவிப் பொலிஸ் அதிபர் உட்பட மேலும் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.



## ராஜீவ் பற்றி சில சுய விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

சென்னையில் நேற்று இரவு நடந்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட இந்தியாவின் முன்னாள் பிரதமரான ராஜீவ் காந்தி 20-08-1944ம் ஆண்டு பம்பாயில் பிறந்தார். இந்தியாவின் முதற் பிரதமரான நேருவின் பேரனான இவர் 1984ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் மூத்த மகனாவார். இவரது மனைவியின் பெயர் சோனியாகாந்தியாகும். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவராவார்.

ராஜீவ் காந்திக்கு இரு பிள்ளைகள உண்டு. மூத்தவர்மகன் பெயர் ராகுல் காந்தி. இளையவர் மகள் பெயர் பிரியங்கா.

இந்தியன் எயர்லைனில் விமான ஓட்டியாக இருந்த ராஜீவ்காந்தி, தம்பியான சஞ்சய் காந்தி விமான விபத்தில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ராஜீவ் அரசியலுக்கு வந்தார்.

1981 ஆண்டு அமேதித் தொகுதியில் இருந்து லோக சபாவிற்கு முதல் முறை தெரிவு செய்யப்பட்ட ராஜீவ் காந்தி 1984, 1989 ஆம் ஆண்டு காலங்களிலும் அதே தொகுதியில் இருந்து லோக் சபாவிற்கு தெரிவு செய்யப்பட்டார்.

அவர் 1984 - 1989 ஆம் ஆண்டு வரையும் இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி 1989 இல் இருந்து 1991 வரை எதிர்க்கட்சித்தலைவராகவும் இருந்தவராவர்.

## உலகத் தலைவர்கள் அதிர்ச்சி; கவலை.

(லண்டன்)

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டது தொடர்பாக உலகத் தலைவர்கள் அதிர்ச்சியும் கவலையும், கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

இக்கொலை தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் அதிர்ச்சி தெரிவித்துள்ளார் பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர். பாகிஸ்தான் பிரதமர் நவாப்சரீவ் காமன்வெல்த் செயலாளர் ரம்பால் உட்பட உலகத்தலைவர்கள் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

## 10 முஸ்லிம் 1 சிங்களவர் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் ஒன்பது முஸ்லிம்கள் சுட்டுக் கொலைலப்பட்டதாகவும், இருவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிததன.

டிராக்டர் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த முஸ்லிம்களே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டதாக சிறிலங்கா வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

அதேவேளை வேறொரு சம்பவத்தில் ஒரு சிங்களவரும் ஒரு முஸ்லிமும் கொல்லப்பட்டதாக அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

## ஒரு சிப்பாய் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு பகுதியில் நடந்த தாக்குதல் சம்பவம் ஒன்றில் இராணுவத் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் செய்திவெளியிட்டுள்ளன.

## ஹெலி தாக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு படுவான் கரைப்பகுதியிலுள்ள பனுகாமத்தில் நேற்றுமுன்தினம 3 மணியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது சேதவிபரம் இடைக்கவில்லை

## தமிழர் உடமை சூறையாடல் திருமலையில் தொடர்கிறது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும் இணைந்து தமிழ்மக்களின் பொருள்களை சூறையாடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நிகழ்ந்து வருகின்றன

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணியளவில் திருமலை மாவட்டத்தில் உள்ள கடற்கரைச்சேனை கட்டைபறிச்சானில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற் (4ஆம் பக்கம் பார்க்க)

## வயலில் நின்ற பெண் மீது இராணுவம் சூடு

(மன்னார்)

நானாட்டானில் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் பெண் மணி ஒருவர் பலத்த காயம் அடைந்துள்ளார்.

நேற்றுக்காலை இடம் பெற்ற இச் சம்பவத்தில் மேரி மரியம்மா (வயது 36) என்ற குடும்ப பெண்மணி கையில் பலத்த காயமடைந்த நிலையில் நேற்று காலை யாழ். போதனா மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக எடுத்து வரப்பட்டார். (ஈ)

## மாதகல் கடற்பரப்பில் மீனவர்கள் மீது தாக்குதல்

(செ. த. ஊ)

மாதகல் கடற்பகுதியில் நேற்றுக்காலை ரோந்து சென்ற கடற்படையினர் கடல் தொழிலாளர்மீது பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டனர். இதன் காரணமாக கடற்றொழிலாளர்கள் அவசரமவசரமாக படகுகளுடன் கரையேறி பாதுகாப்பைத் தேடிக்கொண்டனர்

அதேசமயம் கடற்படையினர் காட்டுப்புலம், சாந்தை ஆகிய கிராமங்களை நோக்கி பீரங்கி வேட்டுக்களைத் தீர்த் (4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 20 தமிழர்கள் கோரமாக வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த இருவேறு சம்பவங்களில் இருபதிற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் சித்திரவதையின் பின் கோரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்கள் இதில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்கள் கண்கள் தோண்டப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை படுவான் கரைப்பகுதியில் உன்னிச்சை கரடியனாறுப் பகுதியில் ஒரு படுகொலைச் சம்பவம் நடைபெற்றது,

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

கரடியனாறுப் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பதினைந்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கொடுமையான சித்திரவதையின்பின் இவர்கள் அனைவரும் கண்ட துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.

இவ்வாறு கண்ட துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டதினால் கொல்லப்பட்ட பதின்மூன்று பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட முடியாமல் அவ்விடத்திலேயே (4ஆம் பக்கம் பார்க்க)

## பழுகாமத்தில் ராணுவத்தால் இரு தமிழர் சுட்டு கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழ் மக்கள் அவ்விடத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பெரிய போரதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுமுன் தினம் நான்கு மணியளவில் படுவான் கரைப்பகுதியிலுள்ள திருப்பழுகாமத்தில் வைத்து இரு தமிழ் மக்களைக் கைது செய்து அவ்விடத்திலேயே சுட்டுக்கொன்றுள்ளனர்

## இரு ஆண்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் இரண்டு தமிழ் ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(4ஆம் பக்கம்பார்க்க)

## வரி விளம்பரம்


தேவை
வில்வம்பழம், தேவை.
மில்க்வைற், யாழ்ப்பாணம்.
(B/2541)


## 5ஆம் திகதி வரை விடுமுறை

(யாழ்ப்பாணம்)

விசேட க.பொ.த. உயர்தரப் பரீட்சை நிலையங்களாக தொழிற்படும் பாடசாலைகளுக்கு அடுத்தமாதம் ஐந்தாம் திகதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை ஏனைய பாடசாலைகள் தொடர்ந்தும் செயற்படும் என கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தெல்லிப்பளைக்கு புதியஉ.அ.அதிபர்

(நல்லூர்)

வடக்கு - கிழக்கு மாகாண சபை சிரேஷ்ட செயலாளர் க. சந்திரராசா மாற்றம் பெற்றுள்ளார். இவர் திருக்கோணமலையிலிருந்து மாற்றலாய் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ளார். சந்திரராசா நேற்றுக் கடமையைப் பொறுப்பேற்றார்.

## காரைநகர் மாணவர் பரீட்சை

(காரைநகர்)

காரைநகர் பாடசாலைகளிற் படித்த க.பொ.த. (சா.த) 1990 ஆண்டு மாணவ மாணவியர்க்கான க.பொ.த (உ.த) வகுப்பிற் தெரிவதற்கானபரீட்சைவரும் 27, 28ஆம் தேதிகளில் யா/நாவலர் மகாவித்தியாலயத்திலும், யா/வட்டு இந்துக் கல்லூரியிலும் நடைபெறும். விபரங்களை இரண்டு பாடசாலைகளிலும் அறியலாம்.

## வன்னிப் பகுதிகளில் யானைகள் அட்டகாசம்

வன்னிப் பகுதிக் கிராமங்களில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

குளங்களில் நீர் வற்றிய காரணத்தினால் காட்டைவிட்டு கிராமங்களுக்குள் நுழையும் யானைகள் நெல் மற்றும் பயிர்களை அழித்துவருகின்றன.

இரவுவேளைகளில் கிராம வீதிகளில் நடமாடும் யானைகள் பயணிகளைத் தாக்குவதாகவும் தெரியவருகின்றது.

சமீபத்தில் சின்னவிளாத்திக்குளம் பகுதியில் யானை தாக்கி குழந்தை ஒன்று இறந்தது குறிப்பிடத்தக்கது. (தி)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீர ஜனனம் | | வீர மரணம் |
|---|---|---|
| 15 | | 22 |
| - | | - |
| 10 | | 05 |
| - | | - |
| 1969 | | 1988 |



### வீரவேங்கை வெள்ளை

துள்ளும் இளமையிலே துயர் சூழ்ந்த பாதையிலே
உள்ளம் விருப்புடனே இணைந்தான் - வெள்ளையெனும்
எங்கள் குலக்கொழுந்து எம்தேச விடியலுக்காய்
வேங்கையென நின்றான் நிமிர்ந்து!

இந்தியர் வந்தாலெம் இன்னல் தொலையுமெனும்
சிந்தனை பொய்யாகி சிரழிந்த வேளை - அந்நிய
ஆட்சியாளரால் அகலாது துயர்களென விளம்பும்
வேட்டுகளால் பிரிந்தது உயிர்!

வெள்ளை வீதி, குடும்பத்தினர்.
சுன்னாகம் தெற்கு. (B-2557)

உங்கள் வெளிநாட்டுக் கடிதங்களை
மிகவிரைவாக உரியவர்களிடம் சேர்ப்பிக்க
எம்மை நாடுங்கள்!

DHL WORLDWIDE EXPRESS

உலகில் 184 நாடுகளில் 2000க்கு மேற்பட்ட
அலுவலகங்களைக் கொண்டிருக்கும்
நிறுவனம்.

D. H. L INTERNATIONAL Ltd.
C/o COSMOS MARKETING SERVICE
முதல்மாடி
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(B-2558)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.
### தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில வகுப்புக்கள் - 1991.

மேற்படி வகுப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் எமது அந்தோர் விளம்பரப்பலகையில் வெளியிடப்பட்டுள்ளது 25-05-91 காலை 9.00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பதிவு செய்வதற்காக தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

73, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்,
20-05-91. (B/2553)

### டிப்ளோமா மனைப்பொருளியல்

### Diploma in Home Economics

கலாலயா

- கேக் ஐசிங்
- சமையற் கலை (கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகள், குளிர் பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள், உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு உணவுகள் தயாரித்தல்)
- தையற் கலை (குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான உடைகள் தயாரித்தல், பூவேலைப்பாடுகள்)
- கூந்தல் அலங்காரம் (கொண்டைகள் போடுதல், விக் தயாரித்தல் மணப்பெண் அலங்காரம் செய்வித்தல்)
- கை வேலை (மக்றமி, நூல் வேலை, கம்பளி நூவேலை, பஞ்சில் பொம்மைகள் செய்தல், வாழைநார் வேலைப்பாடுகள்)
- பூ வேலை (கடதாசியினாலும் துணிகளினாலும் மலர்களை உருவாக்குதல்)
- வர்ணம் தீட்டுதல் (துணிகளிலும், கண்ணாடிகளிலும், இசைத்தட்டுகளிலும்)
- சித்திரக் கலை (சித்திரங்கள் வரைதல், கோலங்கள் போடுதல்)

பயிற்சிக் காலம்: 6 மாதங்கள்

★ பயிற்சி முடிவில் "Diploma in Home Economics" தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
★ கிழமை நாள் வகுப்புக்கள் திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை நடைபெறும்.
★ தொழில் புரிவோர், பாடசாலை மாணவிகள் மற்றும் இல்லத்தரசிகளின் வசதிக்காக சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம்: | 25-05-1991 |
| கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம்: | 27-05-1991 |

★ இத்துடன் சங்கீதம், நடனம், வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் வகுப்புகளும் மாலை நேர வகுப்புகளாக நடைபெறும்.

விபரங்களுக்கு:
கலாலயா
(பதிவு இல: 16020)
விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
(B. 2551)

### நினைவு கூருகின்றோம்...

1991-05-22



லெப்டினன்ட்
எட்றிச்/வெள்ளை
(சுந்தரம் கனகசுந்தரலிங்கம் - உடுவில்)

1988ஆம் ஆண்டு கந்தரோடையில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் காயமடைந்து தன்னைத்தானே சுட்டு வீரமரணமடைந்த

**லெப்.எட்றிச் / வெள்ளை**
(சுந்தரம் கனகசுந்தரலிங்கம் - உடுவில்)

1989ஆம் ஆண்டு ஆயிலடியில் இந்தியப் படையினரும், தேசவிரோத சக்திகளும் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரமரணமடைந்த

**அகிலன்** (சுப்பிரமணியம் நாகேந்திரன் - ஆயிலடி, நெடுங்கேணி)

இதேயாண்டு சாவகச்சேரியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

**பைக்பைக்** (கனகரத்தினம் ஸ்ரீகாந்தன் - சாவகச்சேரி)

இதேயாண்டு கப்புதுவெளியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**அருள்** (அருள்தாஸ் - கரவெட்டி)

**வள்ளுவன்** (த. ரதிநாதன் - ஓடைவெளி கரவெட்டி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2529)

### ❋ சிந்தனைக்கு ❋

சமூகம் சிறந்த நம்பிக்கை வைத்திருப்பது, தனி மனிதனின் ஒழுக்கத்திலேயே.

— வில்லியம் சேனிங்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 22.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# இந்தியபொதுத்தேர்தலில் அந்நியமாகும் மக்கள்!

இந்தியாவின் பத்தாவது பொதுத்தேர்தலின் முதலாம் கட்ட வாக்குப் பதிவு நேற்றுமுன்தினம் முடிவடைந்து விட்டது; எதிர்பார்த்தது போலவே தேர்தல் வன்முறை பெருமளவில் இடம்பெற்றன. நாற்பத்தி ஐந்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்துள்ளனர். சில நகரங்களில் ஊரடங்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. பதினைந்து இலட்சம் ஆயுதப் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டும் வன்முறையைத் தவிர்க்க முடியவில்லை.

தேர்தல் வன்முறை ஒருபுறம் இருக்க தேர்தல் வாக்களிப்பில் மக்கள் சுறுசுறுப்பாக கலந்துகொள்ளாமை அடுத்த முக்கியமான அம்சமாகும். இம்முறை தேர்தலில் மக்கள் குறைந்தளவில்தான் வாக்களிப்பர் என முன்னரே எதிர்பார்க்கப்பட்டு இருப்பினும், எதிர்பார்த்த அளவைவிட குறைந்தளவிலேயே மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். டில்லி தெற்குத் தொகுதியில் முப்பது வீதமான வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்துள்ளார்கள்.

மக்கள் இவ்வாறு பெருமளவில் வாக்களிக்காமல் விட்டமை பாராளுமன்ற ஜனநாயக முறையிலும் தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறையிலும் நம்பிக்கை இழந்துவிட்டார்களா? என்ற கேள்வியையே தோற்றுவிக்கின்றது, தமது பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்கு தேர்தல் முறை ஜனநாயகம் முழுமையான, சரியான ஒரு வழிமுறையாக இல்லாவிடினும் இன்றைய நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகவே உள்ளது. இந்நிலையில் மக்கள் தேர்தலில் கலந்து கொள்ளாமை என்பது மக்களுக்குத் தேர்தல் அமைப்பில் உள்ள வெறுப்பினால் மட்டுமல்ல இந்திய அரசியல் அமைப்பின் மீதும் அரசியல் கட்சியினதும் அரசியல்வாதிகளிடமும் உள்ள வெறுப்புமே காரணமாகும்.

மக்களால் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை அரசாங்கங்களை கலைப்பதற்கு இந்திய அரசியல் சட்டம் இடமளிக்கின்றது. அதேபோன்று மக்களிடம் கொள்கை விளக்கங்களையோ ஆட்சிக்கான அனுமதியையோ பெறாதவர்கள் ஆட்சி அமைப்பதற்கும் வழிவகைகள் உள்ளன. இந்நிலையில், மக்கள் இந்திய அரசியல் அமைப்பிலும், இந்தியத் தேர்தல்களிலும் வெறுப்புக் கொள்வது நியாயமானதேயாகும்.

மேலும், அரசியல் கட்சிகள் தமது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் சாதி, சமய, இன முரண்பாடுகளை வளர்ப்பதன் மூலம் தேர்தல் வன்முறைகளைத் தோற்றுவித்து வருகின்றனர். இத்தேர்தல் வன்முறையால் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். படுகாயமடைகின்றார்கள். சொத்துக்கள் சேதமாகின்றன, அரசியற்கட்சிகளின் இப்போக்குகளின் காரணமாக தேர்தல் காலங்களில் மக்கள் வெளியில் வர அஞ்சுகின்றார்கள். தேர்தல் கடமைக்குச் செல்லும் அதிகாரிகள் கொல்லப்படுகின்றார்கள். தேர்தலில் வாக்களிக்க வரிசையில் நின்ற மக்கள் மீது துப்பாக்கிச் சூடு இடம் பெறுகின்றது இந்நிலையில் அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ விரும்பும் மக்கள் எவ்வாறு வாக்களிப்பில் கலந்து கொள்ள முன்வருவர். அத்தோடு இத்தேர்தலில் உண்மையான பிரதிநிதி எவ்வாறு தெரிவுசெய்யப்படுவார்.

அரசியல்வாதிகள் எந்தக்கட்சியில் உள்ளார் என்பதை மக்கள் மிகவும் சிரமப்பட்டே கண்டறிய வேண்டியுள்ளது. சென்னைத் தொகுதி ஒன்றில் ஜனதாதள (எஸ்) கட்சி வேட்பாளர் ஒருவர் தேர்தலுக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் போட்டியில் இருந்து விலகிக் கொண்டதோடு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள்ளார். தனக்கு வேட்பாளருக்கான அனுமதி கிடைக்கவில்லை, தான் விரும்பியவரை வேட்பாளராக நியமிக்கவில்லை போன்ற விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப அரசியல்வாதிகள் கட்சி மாறுகின்றார்கள். அல்லது புதுக்கட்சி அமைக்கின்றார்கள்

மேலும், தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் வேட்பாளர் எந்தக்கட்சியில் உள்ளார். அல்லது புதுக்கட்சி ஆரம்பித்து விட்டாரா என்பதை அறிவதிலும் மக்களுக்கு பல்வேறு சிரமங்களும் உண்டு.

இக்காரணங்களால் தேர்தல் களத்தில் இருந்து மக்கள் ஒதுங்கிக் கொண்டமை நியாயமானதே. தொடர்ந்தும் தற்போதைய அரசியற் சூழலே இந்தியாவில் நிகழுமாயின் மக்கள் தேர்தலில் இருந்து ஒதுங்கிச்செல்வது அதிகரித்துக் கொண்டே செல்லும். இந்நிலை மக்கள் எப்பொழுது தேர்தல் பாராளுமன்ற முறைமூலம் தமது உரிமைகளைப் பாதுகாக்கலாம் எனக் கருதுகின்றார்களோ அப்பொழுதே மாற்றமடையும்.

# போராட்டம் எங்குநடக்க வேண்டும்; தீர்மானிப்பது எமது பங்களிப்பே!

● யோகி

எமது போராட்டம் கரந்தடிப் போராட்டம், தடுத்து நிறுத்தும் போராட்டம், தாக்கி அழிக்கும் போராட்டமாக மாறி வருகின்றது. நாம் தாக்கி அழிக்காத வரை எல்லைகளை மீட்க முடியாது.

தடுத்து நிறுத்துவதன் மூலம் நீண்ட காலத்தில் பெரிய அளவில் போராளிகளை மட்டுமல்ல நிலப்பரப்பையும் இழப்போம்.

தாக்கி அழிக்கின்றபோது குறுகிய காலத்தில் பெரிய அளவில் இழப்பை அடைவது போல் இருந்தாலும் ஒப்பீட்டளவில் நாம் உண்மையில் இழப்பைக் குறைப்பதோடு எல்லைகளையும் மீட்கிறோம் என நேற்றுமுன்தினம் வண்ணார் பண்ணை ஐயனார் கோயிலடியில் நடந்த லெப்டினன் கேர்ணல் ராதாவின் நான்காவது நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரட்ணம் யோகி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் தாக்கி அழிக்கும் முயற்சியில் உதாரணமாக சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியில் 80க்கு மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்தனர். 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வீரமரணமடைந்த போராளிகளின் ஆயுதங்கள், காயமடைந்த போராளிகளின் ஆயுதங்கள் முகாம் தகர்ப்பில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இவற்றை ஏந்தி நின்று போராட ஆயிரக்கணக்கில் போராளிகள் வேண்டும்.

பல்லாயிரக்கணக்கில் போராட்டத்தில் இணைந்து நாம் போராடாது போனால் சிறிலங்காப்படை நமது எல்லைக்குள் வரும்.

எமது போராட்டம் எல்லையில் அல்லது எல்லைக்கு வெளியே நடக்க வேண்டுமா அல்லது எல்லைக்குள் நடக்க வேண்டுமா என்பது போராட்டத்தில் எமது பங்களிப்பே தீர்மானிக்கும்.

பெரிய அளவில் பங்களிப்பு இருந்தால் எல்லைகள் மீட்கப்படும் இல்லையேல் தாக்கி அழிக்கும் படை தடுக்கும் படையாகும். கரந்தடிப்படையாகும். ஆனால் போராட்டம் தொடரும்.

பேச்சுவார்த்தை என்பது புற்று நோய் போன்றது. மேலெழுந்தவாரியாக குண்டு வீச்சு விமானங்கள் வராது, உலங்கு வானூர்தி வராது, சிலவேளைகளில் மின்சாரம் வரும். இது எம் அடிப்படை பிரச்சினையை தீர்க்காது.

பேச்சுவார்த்தையோடு குடியேற்றம் வரும், சிறிலங்கா காவல்துறை வரும், இராணுவ முகாம் வரும், எமக்கு அழிவு மறைமுகமாக வரும்.

சிறிலங்கா தனக்குத் தேவை வரும் போது பேசும். நாமும் எமது போராட்டத்தின் நியாயத்தை உலகுக்கு எடுத்துக் காட்ட பேசுவோம். ஆனால் நாம் எல்லைகளை மீட்காத வரை பேச்சுவார்த்தை என்பதில் அர்த்தம் இல்லை.

எமது தனிப்பட்ட நலன்களுக்காக பேச்சுவார்த்தையை எதிர்பாராமல் இன்றைய நிலைமைதான் சாதாரண நிலைமை என எண்ணிக் கொண்டு நாம் உற்பத்தியில் ஈடுபட வேண்டும், வாழ வேண்டும், தொடர்ந்தும் போராட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு மாபெரும் விடுதலை இயக்கமாக, மாபெரும் அரசியல் சக்தியாக இருக்கின்றது.

உலகம் தலைவர் பிரபாகரனை ஓர் சிறந்த தலைவராகவும், விடுதலைப் புலிகள் அமைப்பை கட்டுக்கோப்பான, ஒழுங்கமைப்புள்ள சிறந்த விடுதலைப் படையாகவும் ஏற்றுக் கொள்கின்றது.

எமது இயக்கம் சாதிய, பிரதேச, சமய வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று போராடுகின்றது.

மட்டக்களப்பு போராளி கப்டன் ஜெயந்தன் வல்வெட்டித்துறை போராளி கப்டன் சிதம்பரம் இருவரும் பருத்தித்துறை கடலில் நின்ற பெரிய கப்பல்மீது கரும்புலித் தாக்குதலை நடத்தினார்கள்.

வெவ்வேறு இடங்களில் பிறந்தாலும் தமிழர்கள் என்ற உணர்வோடு, எமது மண் மீட்கப்பட வேண்டும் என்ற உறுதியோடு போராடினார்கள். தாக்குதலை நடத்தினார்கள்.

வரலாற்றில் பண்டாரவன்னியன், சங்கிலியன், வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடினார்கள்; தோற்றுப் போனார்கள். ஆனால் தமிழன் எப்பொழுதும் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடியே வந்திருக்கிறான். தமிழீழ விடுதலைப் புலிகள், தலைவர் பிரபாகரன் இந்திய வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடி வெற்றி பெற்றனர்.

நாம் பிரதேசம், சாதிய, சமய வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று போராடுகிறோம். மிகவும் ஒழுங்கும் கட்டுக்கோப்பும் கொண்ட விடுதலைப் படையை கொண்டிருக்கிறோம்.

எந்த நேரத்திலும் இந்த மண்ணைக்காக்க தமது உயிரை தந்து போராட ஆயத்தமாக இருக்கும் பல்லாயிரக்கணக்கான போராளிகளைக் கொண்டிருக்கிறோம்.

மிகச் சிறந்த தலைமையைக் கொண்டிருக்கிறோம்.

நாம் தோற்க மாட்டோம். எம் போராட்டம் வெல்லும்.

விரைவில் இப்போராட்டம் வெல்ல எல்லோரும் போராட்டத்திற்கு பங்களிப்போம் எனவும் தெரிவித்தார்.

## 90 வீத கணிதவியலாளர்கள் வெளிநாடுகளில் சேவை

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய திறமை வாய்ந்த கணிதவியலாளர்கள் தற்பொழுது வெளிநாடுகளில் பணியாற்றுகிறார்கள். ஒருவர் கலாநிதிப் பட்டம் பெறும் வரையில் கல்விச் செலவாக அரசாங்கம் சுமார் ரூபா 45லட்சம் வரை செலவு செய்கிறது.

1980ஆம் ஆண்டு முதல் 90 ஆம் ஆண்டு வரை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய 90சத விகிதமான கணிதவியலாளர்கள் தற்போது வெளிநாடுகளில் பணியாற்றுகிறார்கள்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கம்பியூட்டர் தொழில் நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் வி. கே. சமரநாயக்கா பல்கலைக்கழகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

கடந்த தசாப்தத்தில் கொழும்புப் பல்கலைக்கழகம் 28 தலைசிறந்த கணிதவியலாளர்களை உருவாக்கியதாக பேராசிரியர் சமரநாயக்கா தெரிவித்தார். இவர்களில் 26 பேர் தற்பொழுது வெளிநாடுகளில் இருக்கிறார்கள்

1942 - 1979ஆம் ஆண்டுக்கு மிடையில் கொழும்புப் பல்கலைக்கழகம் 54 உயர் வகுப்புக் கணிதப்பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. இவர்களில் அரைவாசிப் பேர் தற்சமயம் வெளிநாடுகளில் இருக்கிறார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## படகு விபத்து; சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவு கடல் பகுதியில் படகில் ஏறி விளையாடிய சிறுவன் நீரில் மூழ்கி மரணமானான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது. சுதுமலையைச் சேர்ந்த இந்த பதினைந்து வயதுச் சிறுவன் கடலில் தனது தோழர்களுடன் படகில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் உயிரிழந்தான்.

(லோ)

## 'இன்ரறக்' கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரி இன்ரறக் கழக மாணவிகள் அராலியிலுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவும் முகமாக உலர் உணவு வகைகள் உடுபுடைவைகள் பணம் (7000/-)ஆகிய வற்றை அராலி வடக்கு சிற்றூரவையிடம் கையளித்துள்ளனர்.

## அர்ச்சயா பழதொழிற்சாலை ஓராண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அர்ச்சயா பழத்தொழிற்சாலையின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா நேற்று முன்தினம் பிற்பகல் 4 30 மணியளவில் நடைபெற்றது. ''அர்ச்சயா'' நிறுவனப் பொறுப்பாளர் திரு. ஈசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, யாழ் மாவட்டப் பிரதித் தளபதி கவிரோ, மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. பாலகுமார் உட்பட பலர் உரையாற்றினர்.

தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் திரு. ரவி அர்ச்சயா முதலாண்டு நிறைவு மலரை மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராசா அவர்களிடம் வழங்கினார். இத்தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு புதிய சைக்கிள்களை கொள்வனவு செய்யும் அடையாள அட்டைகளை தமிழீழ ஆய்வுநிறுவனத்தின் வன்னிப்பிராந்திய பொறுப்பாளர் திரு. எம். ஜி. ஆர் வழங்கினார். பெருந்தொகையான மக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## பருத்தித்துறை ஆஸ்பத்திரிக்கு எக்ஸ்ரே கருவி

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சு எக்ஸ்றே இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளது என கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

# ஐந்து லோக்சபா தொகுதிகளுக்கு மீள் வாக்குப்பதிவுக்கு உத்தரவு

(டெல்லி)

இந்தியாவில நேற்று முன்தினம வாக்குப் பதிவாகிய 204 தொகுதிகளில் 5 லோக் சபைத் தொகுதிகளிலும், 15 சட்டசபைத் தொகுதிகளிலும் மீளவும் வாக்கெடுப்பு நடத்துமாறு தேர்தல் ஆணையாளர் பணித்துள்ளார்.

பீகாரில் பட்னா, பூர்ணியா தொகுதிகளிலும் உத்தரப்பிரதேசத்தில் மொரடைசேகர், எக்கோவா, மீரட் ஆகியவை அந்த ஐந்து லோக் சபைத் தொகுதிகளாகும். நேற்று டில்லியில் இதை அறிவித்த தேர்தல் ஆணையாளர், தேர்தலுக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

பட்னா தொகுதியிலிருந்து முன்னாள் நிதி அமைச்சர் யஷ்வன் சின்ஹாவும், முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலும் போட்டியிடுகின்றனர்.

ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் குறிப்பிட்ட சில தொகுதிகளிலிருந்து இன்னமும் எவ்வித தேர்தல் மீறல்கள் தகவலும் கிடைக்கவில்லை என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

ராஜஸ்தானில் நான்கு தொகுதிகளில் 50 வாக்குப் பதிவு நிலையங்களில் மறுவாக்குப் பதிவுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம் கான்பூரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தையடுத்து பதற்றமுள்ள பகுதிகளில் ஊரடங்குடன் கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது இராணுவம் ரோந்து சுற்றி வருகிறது. கான்பூரின் வன்முறையினால் இறந்தவரின் எண்ணிக்கை ஒன்பதாக உயர்ந்துள்ளது.

## ஆந்திராவில் கண்ணிவெடி 8 பொலிஸ் பலி

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்தில் நக்சலைட் போராளிகள் வைத்த கண்ணிவெடி ஒன்றில் பொலிஸ் வாகனம் சிக்கியுள்ளது, இச் சம்பவத்தில் எட்டுப் பொலிஸார் உயிரிழந்துள்ளனர்.

## முதலாம் கட்ட வாக்களிப்பில் உத்தரப்பிரதேசத்தில் மட்டும் 55 பேர் உயிரிழப்பு

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாம்கட்ட வாக்குப் பதிவின்போது ஏற்பட்ட கலவரத்தில் 55பேர் வரை உயிர் இழந்துள்ளனர்.

இங்கு கான்பூர் பகுதியிலேயே அதிகளவு பதட்டநிலை நிலவியதாகவும் பதட்டத்திற்கு உட்பட்டிருக்க பகுதிகளில் இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அங்கு கண்டதும் சுடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மீரத்தில் இடம்பெற்ற கலவரத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை முப்பதாக உயர்ந்துள்ளது.

இந்த மாநிலத்தில் 250 வாக்குச் சாவடிகளில் மறு வாக்குப் பதிவு நடாத்தப்பட வேண்டும் என பதினைந்து தேர்தல் அதிகாரிகள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு புகார் செய்துள்ளனர். வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுதல், தேர்தல்மோசடி, வாக்காளர்களை பயமுறுத்துதல் போன்ற சம்பவங்கள் இடம் பெற்றதாகவும் அந்த அதிகாரிகள் தமது புகாரில் தெரிவித்துள்ளனர்.

இந்த மாநிலத்திலேயே முன்னாள பிரதமர்கள் வி. பி. சிங், ராஜீவ் காந்தி ஆகியோர் தேர்தலில் நின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஈராக் எண்ணெயின் ஒரு பகுதியை போர் இழப்பீடாக வழங்க ஐ. நா. கோரிக்கை

(நியூயோர்க்)

வளைகுடாப் போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு இழப்பு ஈட்டுத் தொகை வழங்குவதற்காக ஈராக் தனது கச்சாய் எண்ணெய் வருவாயில் ஒரு பகுதியை ஒரு நிதியத்தில் வைப்புச் செய்யவேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புச் சபை கேட்டுள்ளது.

இது குறித்த தீர்மானத்தை நேற்று முன்தினம் ஐ. நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றியது. போர் சேதத்திற்காக உதவிடும் நிதியத்தை அமைக்கும் இந்தத் தீர்மானத்தை பாதுகாப்புச் சபையின் பதினைந்து நாடுகளில் பதினாலு நாடுகள் ஆமோதித்தன. கியூபா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்தத் தீர்மானத்தின் படி ஈராக் நடந்து கொள்ளாவிடில் அதன் மீது தொடர்ந்து பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று ஈராக்கை பாதுகாப்புச்சபை எச்சரித்தது. இந்தத் தீர்மானம் குறித்து ஐ. நா. சபைக்கான ஈராக்கிய தூதுவர் கருத்து வெளியிடும்போது "ஐ. நா. பாதுகாப்புச் சபையின் இந்தத் தீர்மானம் சட்ட விரோதமானது ஆனால் இந்தத் தீர்மானத்தை ஈராக் ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று சொன்னார்.

### தபால்

கடந்த காலங்களில் வெறுமனே சில உத்தியோகஸ்தர்களின் மேற்பார்வையில் எடுத்து வரப்பட்ட கடிதங்களை இப்பொழுது சிலகாலமாக பிரதம தபால் அதிபர் இன்றி எடுக்க முடியாது என தபால் திணைக்களத்திலிருந்து அறிவுப்பு வந்துவிட்டதாக யாழ் தபாலக அதிகாரி ஒருவர் கூறினார்.

இக்கடிதங்களுடன் பெறுமதிமிக்க முத்திரைகளும் காசோலைகளும் வெளிநாட்டு காப்புறுதிகளும் வருவதால் பிரதம தபால் அதிபர் இன்றி வேறு எவரிடமும் கொடுக்க முடியாது என்று தபால் அமைச்சு கூறிவிட்டதாம். (லோ)

## ஆய்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில இன்று காலை 9 மணியில் இருந்து மாலை 3-30 மணி வரை "தமிழீழத்தின் வளங்கள்" தொடர்பான ஆய்வுக் கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

இதில் யாழ். பல். புவியியற்றுறைத் தலைவர் திரு. எஸ். பாலச்சந்திரன், புவியியற்றுறை விரிவுரையாளர்களான திரு சிவச்சந்திரன், திரு. இராஜேஸ்வரன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் திரு. பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் ஆய்வுரை நடாத்தவுள்ளார்கள். (மு)

### இரு ஆண்கள்

நேற்று முன்தினம் காலை பதினொரு மணியளவில் பெரிய போரதீவு, வெல்லாவெளி ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறி துக்கோடை என்னுமிடத்தில் வைத்து இரண்டு தமிழ் ஆண்களைக் கைது செய்து அவர்களின் கண்களைக் கட்டி இழுத்துச் சென்றுள்ளனர்.

### மாதகல்

தனர். இக்கடற் பகுதியில் மேலும் நான்கு பீரங்கிப்படகுகள் கடற்கரையோரப் பகுதியில் நங்கூரமிடப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

### தமிழர் உடமை

படையினரும் இணைந்து தமிழ் மக்களிற்குச் சொந்தமான மூன்று துவிச்சக்கர வண்டிகள் தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி, வலை, வள்ளம் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளனர். (மு)

## மரண அறிவித்தல்

### செல்வி தம்பு பூபதி

(முன்னாள் கிராமசபை உபதலைவர்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி தம்பு பூபதி கடந்த திங்கட்கிழமை (20 - 05 - 91) காலமாகி விட்டார். இவர் திரு. தம்பு தம்பதிகளின் அன்பு மகளாவார். அன்னாரின் பூதவுடல் அவரின் விருப்பத்திற்கிணங்க யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குக் கையளிக்கப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

"பூபதி இல்லம்" S. திலகராஜசிங்கம். (பாலா)
ஆனைக்கோட்டை. (R/1404)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஆனையிறவில் நீண்ட நேர விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் முழுவதும் கடுமையான விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை ஏழு மணியிலிருந்து மாலை 5 30 மணிவரை இவ்விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த மூன்று குண்டுவீச்சு விமானங்கள், இரண்டு அவ்ரோ விமானங்கள், இரண்டு ஹெலிகொப்டர்கள் ஆகியன இணைந்து இத்தாக்குதலை மேற்கொண்டன. சேத விபரம் கிடைக்கவில்லை. (மு)

## உலகத் தமிழர் பண்பாட்டுக் கழக ஐந்தாவது மாநாடு அவுஸ்திரேலியாவில்

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஐந்தாவது தமிழ் ஆராய்ச்சி (பேரானர்) மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கின்றதெனத் தலைமைச் செயலகத் தலைவர் திரு. ந. வீரப்பன் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து, அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழ்க் கழகங்களின் ஒத்துழைப்புடனும், பல்வேறு தமிழ் அமைப்புகளின் ஒத்துழைப்புகளுடனும் இவ்விழா கலாசாரப் பெருவிழாவாக நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

1974 ஆம் ஆண்டு யாழ். நகரில் அமைக்கப்பட்ட இவ்வியக்கம் கடந்த பதினேழு ஆண்டாக சுமார் 55 நாடுகளில் வேரூன்றியுள்ளது.

சென்ற காலங்களில் இவ்வியக்கமானது சென்னை, மொறிசியஸ், சேலம், கோலாலம்பூர் ஆகிய நகரங்களில் மிகச்சிறப்பான முறையில் மாநாடுகளை நடாத்தி வெற்றிவாகை சூடி வந்திருக்கின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கும் இந்தபேரானர் மாநாட்டிற்கு உலகநாடுகளில் இருந்தும் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட கல்விமான்கள், பேராளர்களாக அழைக்கப்பட்டுள்ளார்கள். (24)

## நகைக்கடை உரிமையாளர் அபராதம் செலுத்தினர்

(கொழும்பு)

கொழும்பில் கடத்தல் தங்கத்தை வாங்கிய மூன்று நகைக்கடை உரிமையாளர்கள் 5 60.000 ரூபாய் அபராதம் செலுத்தினார்கள் என கூறப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இலங்கைக்கு களவாகக் கடத்திக் கொண்டு வரப்பட்ட தங்கப் பாளங்களை வாங்கியதாகச் சொல்லப்படும் மூன்று தங்க நகை விற்பனை நிலையங்களுக்கு சுங்கப்பகுதியினர் அபராதம் விதித்தனர்.

இந்தத் தங்கக் கடத்தல் மோசடிக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் பத்துப்பேருக்கும் 1 60,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள் சுங்கப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கெ. ப. கூட்டுறவுச் சங்கத்திற்கு ஊர்காவற்றுறையில் 33 லட்சம் ரூபா நட்டம்

(நல்லூர்)

தீவுப்பகுதியில இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் ஊர்காவற்றுறை தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் ரூபா 33 லட்சம்பெறுமதியான சொத்துக்களை இழந்துள்ளது. அங்கத்தவர்கள், பதவியாளர்கள் தொழில் வாய்ப்பையும் இழந்துள்ளனர்.

ஊர்காவற்றுறை தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்கத்தின் கிளை தற்காலிகமாக வடமராட்சி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இயங்கி வருகிறது. இதேவேளை பணியாளர்களுக்கு ஏனைய சங்கங்களில் தொழில் வாய்ப்புகள்ஏற்படுத்தவும் சமாசம் முயற்சி எடுத்து வருகிறது.

### மட்டக்களப்பில்

இடப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இரண்டாவது படுகொலைச் சம்பவம் வாழைச்சேனையில் நடைபெற்றது.

அதே தினம் காலை ஒன்பது மணியளவில் வாழைச்சேனை வைத்தியசாலைக்குச் சென்ற ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்களை கைது செய்த சிறிலங்கா இராணுவம் அவர்களின் கண்களைத் தோண்டியபின்பின் அதேயிடத்தில் வைத்து கொடூரமான முறையில் வெட்டிக் கொன்றனர்.

வாகரையைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களான செல்வன் ரபேஸ் வயது 22). செல்வன் நேமிநாதன் (வயது 19). செல்வன் நவநீதன் (வயது 17) ஆகியோர் உட்பட ஐந்து தமிழ் இளைஞர்களே இவ்வாறு வாழைச்சேனையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

1988, 1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் இதைப் போன்றே சிறிலங்காவில் சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டவர்கள் என்பது தெரிந்ததே. அதேவேளை இவ்வாறான கோரக்கொலைகள் அண்மையில் கிழக்கிலங்கையில அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஹெலி தாக்கு

(செ. த மை)

அச்சுவேலி-அதிரிப்பாய் புத்தரவை வெளியில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது நேற்றுமுன்தினம்மாலைஉலங்குவானூர்தி ஒன்று சரமாரியாக துப்பாக்கி வேட்டுகளை மேற்கொண்டது. இளைஞர்கள பாதுகாப்பைத் தேடிக்கொண்டதால் எவருக்கும் காயமேற்படவில்லை. இத்தாக்குதலின் போது புல்மேய்ந்து கொண்டிருந்த பசுமாடு ஒன்று பலியானது.

## ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் இராணுவ முகாம் பகுதியை அண்டிய இடங்களில் நேற்று ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இந்த ஷெல் தாக்குதலில் எவருக்கும உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக செய்திகள் கிடைக்கவில்லை.